நல்லூர் கலை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கடகம்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 07 புதன்கிழமை (19-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 84

சர்வதேச உத்தரவாதத்துடன் பேச்சை தொடங்க வற்புறுத்து

முச்சந்தி முரளி

அப்ப ... தபால் பொதிகள் கப்பலிலை சுற்றுலாப் புறப்பட்டுப் போகுது போலை.....!

கொழும்பில் நேற்று கண்ணீர் புகைக்குண்டு

கொழும்பு நகரில் நேற்று கும்பல் ஒன்றைக் கலைப்பதற்காகப் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித் (6 ஆம் பக்கம் பார்க்க)

கொக்குத்தொடுவாய் தாக்குதலில் சிப்பாய் பலி!

ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 19

மணலாறு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை நடத்திய திடீர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், அதற்குரிய நான்கு மகசின்களும், ஜே. ஆர். ரகக் கைக் குண்டுகள் இரண்டும், நடுத்தர ரவைகள் முப்பத்திரண்டும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-த]

சம்பூரில் ஆறு தமிழர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

திருகோணமலை, பெப். 19

திருகோணமலையின் சம்பூர், சீதனவெளி ஆகிய இடங்களில் தொடர்ந்து இடம் பெறும் இராணுவச் சுற்றிவளைப்பின் போது கடந்த ஞாயிறன்று மட்டும் ஆறு தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமங்கள் கடந்த மாதம் 21 திகதி முதல் இம் மாதம் 10 ஆம் திகதிவரை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் மேலும் பல இடங்களில் இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

தாண்டிக்குளம் பகுதியில் இருபது இளைஞர்கள் கைது!

வவுனியா, பெப். 19

கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் தாண்டிக்குளம் பகுதியில் 20 இளைஞர்கள் இராணுவத்தினராலும், தமிழ்க் குழு ஒன்றினாலும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதியில் 6 முதியவர்களை படையினர் பிடித்துச் கித்திரவதை செய்தனர் என்றும் — பல பெண்களும் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

• கடந்த மூன்று தினங்களில் வவுனியா நகரப் பகுதியில் தொழில் செய்து கொண்டிருந்த 13 தமிழ் இளைஞர்கள் தமிழ்க் குழுக்களால் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

யாழ். தபால் பொதிகள் கப்பலில் திரும்பிச் சென்றன

யாழ்ப்பாணம், பெப். 19

கப்பலில் எடுத்துவரப்பட்ட — வடபகுதிக்குரிய — 200 தபால் பொதிகள், பருத்தித்துறையில் தரித்து நின்ற கப்பலில் ஒரு வாரகாலம் கிடந்த பின்னர் திரும்பிச் சென்றன.

தபால் பொதிகளை ஏற்றி வந்த ''குமண'' கப்பல், துறைமுகத்தில் ஒருவார காலம் தரித்து நின்றபோது தபாலைப் பொறுப்பேற்க அதிகாரிகள் எவரும் வரவில்லை என்றும்—

இதனையடுத்து பொருள்களில் ஒரு பகுதியை மட்டும் இறக்கிய நிலையில் கப்பல் நேற்று முன்தினம் திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து திரும்பும் நோயாளர்களை திருமலையில் வைத்து ஏற்றிக் கொண்டு 'குமண' கப்பல் இன்று அல்லது நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும்—

அதன் பின்னரே தபால் பொதிகள் கப்பலில் இருந்து இறக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து யாழ். தபாலக வட்டாரங்களிடம் கேட்டபோது—

கப்பலில் தபால் பொதிகள் [6 ஆம் பக்கம் பார்க்க]

லண்டனில் தமிழர் பேரவை தீர்மானம்

லண்டன், பெப்ரவரி 19

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சர்வதேச ரீதியில் உறுதிசெய்யப்பட்ட பேச்சுவார்த்தையை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தொடங்க வேண்டும். இப்பேச்சுவார்த்தைக்கு இரு சாராருக்கும் ஏற்ற மத்தியஸ்தர் ஒருவர் ஏற்பாடு செய்யப்படுவது அவசியம்.

லண்டனில் அண்மையில் சர்வதேச தமிழர் பேரவையின் மாநாடு ஒன்று நடைபெற்றது. உலகின் பல பாகங்களில் இருந்தும் 160 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே இவ்வாறு வற்புறுத்தப்பட்டது.

★ இலங்கையில் ஓர் ஒன்றிணைந்த அமைப்பின் கீழ் சிங்களவர்களும் தமிழர்களும் அமைதியாக, சுதந்திரமாக வாழும் வகையை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை நடத்த தமக்குள்ள விருப்பத்தை விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் வெளியிட வேண்டும்.

★ தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திவரும் போர் நீதியான நியாயமான ஒன்றென இப்பேரவை அங்கீகரித்துள்ளது.

★ எந்த ஒரு பெரும் [6 ஆம் பக்கம் பார்க்க]

மகாமகத் திருவிழாவில் விபத்து! பல்கனி விழுந்து 65 பக்தர்கள் பலி!!

கும்பகோணத்தில் நேற்று நடந்த பரிதாபம்

சென்னை, பெப். 19

தமிழ்நாடு கும்பகோணத்தில் நேற்று மகாமகத் திருவிழாவின் போது தீர்த்தக் குளத்துக்கு அருகில் இருந்த பழைய கட்டடம் ஒன்றின் 'பல்கனிச் சுவர்' இடிந்து விழுந்தபோது ஏற்பட்ட நெரிசலில் குறைந்தது 65 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை 65இற்கும் அதிகம் என்று உறுதி செய்யப்படாத செய்திகள் தெரிவித்தன.

பல்கனி மீது ஏறிநின்று திருவிழாவைப் பார்த்த மக்களின் பாரம் தாங்காமல் அந்த பல்கனி உடைந்து அதன் கீழே நின்று கொண்டிருந்த மக்களின் மீது விழுந்ததில் பலர் உயிரிழந்ததாக இந்தியச் செய்தி ஏஜென்ஸிகள் சில தெரிவித்தன.

பல்கனிச் சுவரின் இடிபாடுகளின் கீழ் சிக்கியும், நெரிசலில் அகப்பட்டும் பலர் உயிரிழந்தனர். நெரிசலில் மயங்கி விழுந்த பலர் மி தி யு ண் டு [6 ஆம் பக்கம் பார்க்க]

தீர்த்தமாட ஜெயலலிதா வந்தபோது ஏற்பட்ட கலவரத்திலேயே பலர் பலி!

சென்னை, பெப். 19

மகாமகத் திருவிழாவில் கலந்து கொண்டு தீர்த்தக் குளத்தில் நீராடுவதற்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வந்தபோது ஏற்பட்ட களேபரத்திலேயே பக்தர்கள் பலர் உயிரிழந்தனர் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்புக் கொண்ட தீர்த்தக் குளத்தைச் சுற்றி, சுபநேரத்தில் தீர்த்தமாடுவதற்குத் தயாராக பக்தர்கள் திரண்டிருந்தபோது, தமிழக முதல்வரும் தீர்த்தமாட அங்கு வந்து சேர்ந்தார்.

அவரின் பாதுகாப்புக் கருதி கூட்டத்தைக் கலைக்க பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

குளத்தின் மூன்றில் ஒரு பகுதியைத் தடை செய்து, பொலீஸார் அங்கிருந்த பக்தர்களை அப்புறப்படுத்தினர் என்றும்—

இதனால் குளத்தின் ஒரு மூலைக்குத் தள்ளப்பட்ட பக்தர்கள் நகரக்கூட முடியாத நிலையில் நெரிசலில் சிக்கி களேபர நிலை உருவானது என்றும் அச்செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (6 ஆம் பக்கம் பார்க்க)

விபத்தில் 15 பேர் பலி!

சென்னை, பெப். 19

தமிழ்நாடு, திண்டிவனம் அருகில் நேற்று இடம்பெற்ற லொறி விபத்து ஒன்றில் ஏழு பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

25 லட்சம் பக்தர்கள் தீர்த்தமாடத் திரண்டனர்

நேற்று கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் தீர்த்தோற்சவத் திருவிழாவில் சுமார் 25 லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை வரும் மாசி மகத்தின்போது — குறிப்பிட்ட சுபநேரத்தில் — கும்பகோணம் கோயில் தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தால் பாவங்கள் தொலையும் என்பது இந்துக்களின் ஐதீகமாகும்.

இதன்படி நேற்று நண்பகல் வந்த சுபநேரத்தில், தீர்த்தக் குளத்தில் லட்சக் கணக்கில் பக்தர்கள் தீர்த்தமாடினர்.

காஞ்சி சங்கரமடத்தின் ஜேயேந்திர சரஸ்வதி சுவாமிகள், விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் திருப்பனந்தாள், திருவாவடுதுறை, தர்மபுரம் ஆகியவற்றின் ஆதீன முதல்வர்கள் ஆகியோர் உட்பட தமிழ்நாட்டிலும் மற்றும் ஏனைய மாநிலங்களிலும் உள்ள இந்து மதத் தலைவர்கள் பலர் மகாமகத் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

நேற்று இடம்பெற்ற மகாமகத் தீர்த்தோற்சவத் திருவிழா, 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறுவது என்ற சிறப்புடன் 144 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் ஒன்றாகவும் அமைந்தது என்றும் அறிவிக்கப்படுகின்றது.

[உ-எ-த-க]

வாழ்த்துக்கள்

இன்று தனது இரண்டாவது ஆண்டை நிறைவு செய்யும் "ஈழநாதம்" நாளிதழுக்கு உதயன் தனது மனமுவந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறான.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சீனாவின் குரங்கு ஆண்டு:

புஷ், யெல்ட்சின், மேஜர் பதவிக்கு ஆபத்து வருமா?

சீனாவில் குரங்கு ஆண்டு பிறந்திருக்கின்றது.

சீனப் பஞ்சாங்கத்தின்படி கடந்த நான்காம் திகதி பிறந்த குரங்கு ஆண்டு, நீரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது என்று அந்த நாட்டுச் சோதிடர்கள் கூறியுள்ளனர்.

பஞ்சபூதங்களில் ஒன்று நீர். பன்னிரண்டு ஆண்டு சுற்றில் வரும் சீன ஆண்டுகளை ஒவ்வொரு பஞ்சபூதமும் ஆட்சி செலுத்துகின்றது.

சீனாவைப் பொறுத்த வரை குரங்கு ஆண்டு நன்மைகளையே செய்யும் என்று சீனச் சோதிடர்கள் கணித்துள்ளனர். ஆனால் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஆகியோருக்கு குரங்கு ஆண்டு நன்மை கொடுக்காது என்றும் சோதிடர்கள் ஆருடம் கூறியிருக்கின்றனர். ''இத் தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை வைத்திருக்க மாட்டார்கள்; ஆட்சிப் பீடத்தில் இறங்க வேண்டிவரும்'' — என்றும் சோதிடர்கள் கணித்துள்ளனர்.

87 வயதான சீனப் பெருந்தலைவர் டெங்ஷியா ஓபிங் 1993 வரை பதவியில் நீடிக்கலாம் என்று சீன சோதிட நிபுணர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

திருமணமாகாத பெண்கள் தங்களின் வருங்காலக் கணவரைத் தேடுவதற்கு குரங்கு ஆண்டு உதவும் என்று தெரிவிக்கப்படுகின்றன.

'குரங்'கின் கண்காணிப்பின் கீழ் வருங்காலக் கணவன்மாரைத் தேடுவது திருமணமாகாத இளம்பெண்களுக்கு இலகுவாக இருக்கும் என்று சீனச் சோதிடத்தில் நிபுணரான ஜோன் சான் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

தேசிய உளவுப் பணியகம் புனரமைக்கப்பட உள்ளது

பிரிட்டிஷ் பணியகம்போல இயங்கும்

கொழும்பு, பெப். 19

பிரிட்டனில் உள்ள ''எம் 15'' உளவுப் பணியகம் போன்று இலங்கையின் தேசிய உளவுப் பணியகத்தை மாற்றி அமைக்கும்படி உயர் நிலைக்குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது.

மாற்றி அமைக்கப்படும் பட்சத்தில் தற்போதைய தேசிய உளவுப் பணியகம், வெளிநாட்டுப் பயமுறுத்தல்கள் பற்றிய புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கும் பிரதான அமைப்பாக இயங்கும் என்றும்—

அங்கு பணியாற்றுபவர்களுக்கு இடமாற்றம் இல்லை என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டினுள் இருந்து வரும் பயமுறுத்தல்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்று, பொலீஸ் மா அதிபரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்பிற்கான புலனாய்வு வேலைகள் பொலீஸாருக்குரிய கடமை என்பதே இச் சிபார்சின் நோக்கமாகும்.

ஏனைய ஜனநாயக நாடுகளில் உள்நாட்டுப் பாதுகாப்பு பொலீஸாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது

முன்னாள் இராணுவத் தளபதி டெனிஸ் பெரேரா, முன்னாள் விமானப்படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ, முன்னாள் பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத் ஆகியோர் கொண்ட குழுவே இச்சிபார்சுகளைத் தெரிவித்துள்ளது. (இ-எ)

31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 1929 — 03 — 16

மறைவு: 1992 — 01 — 20

அமரர்

நாகலிங்கம் பொன்னம்பலம்

[இளைப்பாறிய இந்தியன் வங்கி எழுதுவினைஞர்]

காலமெல்லாம் காத்திருந்தீர் சிறகால் எம்மை
கழிந்ததையா மாதமொன்று நீரேயேகி
வாழ்வெல்லாம் உம் நினைவாய் வாழ்வோம் ஐயா
வானுலகில் இருந்தெம்மைக் காத்தே வாரீர்!

மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், மைத்துனிகள்,
சகலன், பெறாமக்கள், உறவினர்,
நண்பர்கள்.

314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [19777]

தமிழின் சொல் வளம் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

கம்பன் விழாவில் பேராசிரியர் நந்தி ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 19

புதிய சிந்தனைகள், புதிய இலக்கியங்கள் பெருகி வரும் இவ்வேளையில், புதிய தொழில் நுட்ப அறிவு அன்றாடத் தேவையாகிவிட்ட இவ்வேளையில், தமிழ் மொழியின் சொல்வளம் பெருக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

திருக்குறள், கம்ப இராமாயணம், சிலப்பதிகாரம், மற்றும் சங்க நூல்களில் செழிப்பான தமிழ்ச் சொற்கள் உள்ளன. அவற்றை ஆராய்ந்து எழுத்து வழக்கிற்குக் கொண்டுவர வேண்டும்.

இதற்கெனச் சொல்லாய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு தமிழின் சொல்வளம் பெருக்கப்பட வேண்டும். கம்ப ராமாயணத்தில் உள்ள சொற்களை தெரிந்து தொடுப்பதற்குக் கம்பன் கழகம் ஒரு சொல்லாய்வுக் குழுவை நியமிக்கலாம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பதில் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி].

நல்லூரில் நடைபெற்ற நான்கு நாள் கம்பன் பெரு விழாவின் இறுதி நாள் மாலை நேர நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

ஊரடங்கையும் பொருட்படுத்தாது, ஷெல் வீச்சு உட்பட இராணுவ நடவடிக்கை ஆகியவற்றின் மத்தியிலும் கம்பன் விழா இறுதி நாள் நிகழ்ச்சிகளைக் காண ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். நல்லை ஆதீன மண்டபம் நிறைந்து, அதனை அண்டிய வீதிகள், வெளிகள் என்பன நிரம்பி நல்லூர் மேற்கு வீதியிலும் மக்கள் திரண்டிருந்தனர். பலரும் ஒலிபெருக்கி மூலமே நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்தனர். பேராசிரியர் நந்தி தமது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ் வளர்வதற்கு அதன் சொல் வளம் பெருக்கப்பட வேண்டும். பழைய தமிழ் நூல்களில் உள்ள பல சொற்கள் வழக்கிழந்து போய் விட்டன. அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

ஆங்கிலத்தில் மூன்று லட்சம் சொற்கள் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அவற்றில் 60 சத வீதமானவை வேற்றுமொழிகளில் இருந்து உள்வாங்கப்பட்டவை. நாமும் வேற்று மொழிச் சொற்களை தமிழ்ப் படுத்தலாம்.

தமிழ் மொழியுடன் பிற மொழிகளையும் கற்றால் தான் அறிவைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தொடக்கவுரை நிகழ்த்தினார்.

காலஞ்சென்ற தவில் மேதை என். ஆர். சின்னராசாவின் திருவுருவப்படமும் விழாவில் திரைநீக்கம் செய்யப்பட்டது. நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

மேலும் மேன்முறையீட்டுப் பட்டிமண்டபமும் இடம் பெற்றது. (அ-10)

டாக்டர்கள் 48 பேர்

யாழ்ப்பாணம், பெப். 19

1991 அக்டோபரில் நடந்த மருத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகளை யாழ். பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது,

இப்பரீட்சையில் மொத்தம் நாற்பத்தெட்டு மாணவர்கள் சித்தியடைந்து டாக்டர்களாவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

பசறை, களுகல்ல பகுதிகளில் இரு புதிய ராணுவ முகாம்கள்

கொழும்பு, பெப். 19

ஊவாவில் களுகல்ல, பசறை ஆகிய இடங்களில் இரு புதிய இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பிரதேச சபை கட்டடங்களிலேயே இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

இதேசமயம், வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக ஊவாப் பகுதியிலுள்ள முகாம்களில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தியத்தலாவ பிரதான பயிற்சி முகாமில் கூட தற்சமயம் ஆயிரத்து 200 வரையான இராணுவத்தினரே உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஒ-10)

உள்ளகக் கணக்குப் பரிசோதகர் (Internal Auditor)

மேற்படி பதவிக்கு அனுபவமும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆகக் குறைந்தது பத்து வருட வேலை அனுபவம் அவசியம். பல உப பிரிவுகளின் கணக்குகளைப் ஒன்றிணைத்து முக்கிய தரவுகளை முன்வைப்பதில் கைதேர்ந்தவராக இருக்க வேண்டும்.

கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களுடன் உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப் பத்திரங்களை இணைத்துப் பூரணமான சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
உதயன் வெளியீட்டகம்,
இல. 9, இரண்டாவது ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், பெப். 19

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சைவ வளர்ச்சிக் கழகம் நாளை வியாழக்கிழமை திருவள்ளுவர் விழாவை நடத்துகிறது.

பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவில் முதன்மை விருந்தினராக சிவதாம வள்ளல் க. கனகராசா கலந்து கொள்வார். கவிஞர் சோ. பத்மநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

காலையில் திருக்குறள் கண்காட்சியை பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த திரு. சு. வெற்றிவேலாயுதம் திறந்து வைப்பார்.

திருவள்ளுவர் விழாவில் மரம் நாட்டுதலும் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமையும். [அ]

எழுதுவினைஞர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 19

பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட தரத்திற்கான பரீட்சைக் கருத்தரங்கு, இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி இப்பரீட்சைக்கு தோற்ற இருக்கும் எழுதுவினைஞரின் நலன் கருதி யாழ். கல்வி அலுவலகத்திலும், கச்சேரியிலும் கடமை புரிந்து வரும் அலுவலர்கள் இணைந்து இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளனர். [ஒ]

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 21 — 09 — 1912

மறைவு: 20 — 01 — 1992

அமரர் திரு. நா. வேலுப்பிள்ளை

[மயிலு வாத்தியார், ஓய்வு பெற்ற ஆசிரியர்]

எம் வாழ்வுக்கு ஒளி விளக்காய் நின்று அன்புடன் வழிகாட்டி பண்புடன் வாழ வைத்த தெய்வம். எங்கள் குடும்பத் தலைவரது அந்தியேட்டி வீட்டுக் கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் [19-02-1992] இன்று நடைபெறும். அமரரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
அராலி வடக்கு, மைத்துனர்மார், பேரப்பிள்ளைகள்
வட்டுக்கோட்டை. [19780]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாதம் ... யாழ்ப்பாணம்

கொழும்பில் குண்டுத் தாக்குதல் கிலி!

தமிழர் வாழும் பகுதிகளில் பொலீஸார் தீவிர தேடுதல்

கடந்த ஞாயிறன்று 28 இளைஞர்கள் கைது

கொழும்பு, பெப். 19

கொழும்பில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் பொலீஸார் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுத்தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாக வெளியான புலனாய்வு அறிக்கைகளை அடுத்தே இத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், கொம்பனி வீதி, கிராண்ட்பாஸ் முதலிய பகுதிகளில் சந்தேகத்தின் பேரில் 28 தமிழ் இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

கொழும்பில் உள்ள விடுதிகள் மற்றும் தனியார் வீடுகள் மீதே பொலீஸார் திடீர் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

சந்தேகத்துக்கு இடமானவர்களைப் பொலீஸார் பொலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.

கொழும்பில் முக்கிய பகுதிகளிலும், பொது மக்கள் நடமாடும் பகுதிகளிலும், ஏனைய இடங்களிலும் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோர் மற்றும் புதிய வாகனங்களைத் திடீர்ச் சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளையும் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

வெள்ளவத்தையில் சில தமிழ் இளைஞர்களை பொலீஸார் சந்தேகத்தின் மீது கைது செய்தனர். விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

(ஒ-எ)

உயர் பொலீஸ் அதிகாரிகள் குழு

புலிகள் அறுவரைத் தேடி கொழும்பில் வேட்டை

கொழும்பு, பெப். 19

கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாகக் கூறப்படும் ஆறு விடுதலைப் புலிகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் உயர் பொலீஸ் அதிகாரிகள் குழு ஒன்று ஈடுபட்டுள்ளதாம்.

தேடப்பட்டு வரும் அறுவரில் இருவர் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த ரகு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வினோத் ஆகியோரே என்றும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகள் இராணுவப் பிரிவின் உயர் தலைவர் தினேஷின் உதவியாளரே வினோத் என்று பொலீஸார் நம்புகின்றனர். கொழும்பினுள் ஊடுருவியுள்ள ஆறு விடுதலைப் புலிகளும் தினேஷின் பணிப்புரையின் பேரில அல்லது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் உத்தரவின்பேரில் செயற்படுகின்றனர் என்றும் பொலீஸார் நம்புகின்றனர். [ஒ-எ]

குடாநாட்டு மக்களின் கஷ்டங்கள் பற்றி

கொழும்பில் அதிகாரிகளுடன் செஞ். பிரதிநிதி பேசுவார்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டு மக்களின் இன்றைய நிலைமைகள், கஷ்டங்கள் குறித்து இங்கு வந்திருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. பியறோ வாட்சன் விரிவாக அறிந்து கொண்டார். இதை அடுத்து திரு. வாட்சன் நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

விடுதலைப் புலிகள் தலைவர்கள் உட்பட யாழ். ஆஸ்பத்திரி அரச, மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் அவர் பேச்சு நடத்தி இருந்தார்.

திரு. வாட்சன் குடாநாட்டு மக்களின் தேவைகள், கஷ்டங்கள் குறித்து அரச உயர் மட்ட அதிகாரிகளுடன் கொழும்பில் பேச்சு நடத்த இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

எதிரணியினரின் கூட்டு மேதினம்

கொழும்பு, பெப். 19

அடுத்து வரும் மேதினத்தை எதிரணிக் கட்சிகள் கூட்டாக கொண்டாட ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

எனினும் லலித் — காமினியின், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது முடிவை இன்னும் அறிவிக்கவில்லை.

(ஒ-10)

சிங்களவரை ஒதுக்கி விட்டு

தமிழ்ப் பயணிகள் மட்டும் பதுளை வீதிகளில் சோதனை

பதுளைப் பகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் வீதித் தடுப்புகள் போடப்பட்டு, தமிழ்ப் பயணிகள் சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

பஸ்களில் மற்றும் வாகனங்களில் பயணம் செய்வோர் இறக்கப்பட்டு, வரிசையாக நிறுத்தி சோதனையிடப்படுகின்றனர். இந்த சோதனை நடவடிக்கையின்போது சிங்களப் பயணிகள் தனியாக நிறுத்தி வைக்கப்படுகின்றனர். அவர்களிடம் எதுவித சோதனையையும் பொலீஸார் நடத்துவதில்லை.

தமிழர்களின் அடையாள அட்டைகள், பொதிகள் என்பனவும் பரிசோதிக்கப்படுகின்றன. அவர்களின் இடுப்புகளையும் பொலீஸார் தட்டிச் சோதிக்கின்றனர்.

கொழும்புச் சிங்கள பத்திரிகை ஒன்றின் செய்தியாளர் அண்மையில் அங்கு சென்று, பார்வையிட்டு இத் தகவல்களை எழுதியுள்ளார்.

[ஒ-10]

திட்டமிட்ட முறையில்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியா, இலங்கை பிரசார யுத்தம்

மாத்தயா பேட்டி

கொழும்பு, பெப்.19

இந்தியாவும், இலங்கையும் பிரசாரரீதியான ஒரு யுத்தத்தை விடுதலைப் புலிகளுக்கு எதிராக, கூட்டாக ஆரம்பித்துள்ளன. இந்திய அரசு திட்டமிட்ட முறையில் எமது போராட்டத்தை முறியடிக்க நீண்டகாலமாக எடுத்து வரும் முயற்சிகளின் தொடரே இந்த புதிய இராஜதந்திர நடவடிக்கையாகும் இது எமக்கு ஒன்றும் ஆச்சரியத்தை கொடுக்கவில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவரது பேட்டியில் —

இலங்கை அரசு அதன் படைப்பலத்தை பாவித்து தாக்குதல்களை மேற்கொண்டால், நாமும் எமது தந்திரோபாயங்களை மாற்றுவோம்.

சமீப காலமாக அரச படைகளுக்கு போரில் கடும் சேதம் ஏற்பட்டு வருவதை அரசு அதன் பிரசாரத்தால் மூடி மறைத்து வருகிறது அவர்களிடம் இருந்து பெரும் தொகையான ஆயுதங்களை கைப்பற்றியுள்ளோம். நாம் எடுத்துள்ள ஆயுதங்களில் பல தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் அடங்கியுள்ளன — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[ஒ-3]

மலையகத் தோட்டங்களை

இந்திய நிறுவனங்களிடம் வழங்கும் யோசனைக்கு தெற்கில் கடும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 19

மலை நாட்டிலுள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களின் நிர்வாகத்தை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவது என்ற யோசனைக்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

449 தோட்டங்களின் நிர்வாகத்தை ஏற்று, நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்களை அனுப்பியுள்ள இந்திய நிறுவனங்களில் டாட்டா மற்றும் பிர்லா போன்ற பிரபல்ய நிறுவனங்களும் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தோட்டங்களை நிர்வகிக்க கேள்விப் பத்திரங்களை அனுப்பியுள்ள நிறுவனங்களில் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களும் அடங்கும்.

ஒவ்வொரு நிறுவனமும் 15 முதல் 20 தோட்டங்களை அல்லது 20 ஆயிரம் முதல் 28 ஆயிரம் ஏக்கர் வரை நிர்வகிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டங்கள் அரசுக்குச் சொந்தமாக இருக்கும் அதேவேளை நிர்வாகம் தான் தனியார் மயப்படுத்தப்படுகின்றது என்று அரசியல் பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் தோட்டங்களைத் தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்கலாம் என்று தெரிகிறது

(ஒ-எ)

ராஜீவ் சொலை வழக்கில்

சித்திரவதை மூலம் வாக்கு மூலம்; நிராகரிக்கக் கோரி நீதிமன்றில் மனு

சென்னை, பெப்.19

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் எதிரிகளான முருகன், கே. பேரறிவாளன் மற்றும் 'நர்ஸ்' பத்மா ஆகியோர், விசேட புலனாய்வு [சி. பி. ஐ.] அதிகாரிகள் தம்மைச் சித்திரவதை செய்து பொய்யான வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளனர் என்று தெரிவித்தும்—

அந்த வாக்கு மூலங்களை நிராகரிக்கும்படி கோரியும் சென்னை விசேட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

சி. பி. ஐ. அதிகாரிகள் தம்மை கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள் என்றும்— தங்களை நித்திரை கொள்ள அனுமதிக்கவில்லை என்றும்—

சில வேளைகளில் உணவு கூட வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் தங்கள் மனுக்களில் குற்றஞ் சாட்டி இருக்கிறார்கள்.

முருகன் தனது மனுவில், 'பொலீஸ் மாஅதிபர் டி. ஆர். கார்த்திகேயன் திராவிட கழகத்துக்கும், தி. மு. கவுக்கும் எதிராக வாக்கு மூலம் அளிக்கும்படி நிர்ப்பந்தித்தார். நான் மறுத்துவிட்டேன். அதனால் பொலீஸ் மா அதிபரின் முன்னிலையே நான் தாக்கப்பட்டேன்,' எனக் கூறியிருக்கிறார்.

வெவ்வேறான திகதிகள் இடப்பட்ட வெற்றுத்தாள்களில் கையொப்பமிடும்படி நிர்ப்பந்தித்தார்கள். தாங்கள் விரும்பியவற்றைச் சொல்லும்படி என்னை நிர்ப்பந்தித்து வீடியோவில் பதிவு செய்தார்கள் —எனவும் முருகன் தமது மனுவில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

(த-ஒ)

மட்டு. மாவட்டத்துக்கு 5 ஏ. எஸ். பிக்கள் நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான பட்டினங்களான வாழைச்சேனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி ஆகியவற்றுக்குப் பொறுப்பாக தனித்தனி உதவிப் பொலீஸ் அதிபர்கள் [ஏ. எஸ். பி.] நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 5 உதவி பொலீஸ் அதிபர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் இருவர் மட்டக்களப்பு பொலீஸ் அலுவலகத்தில் பணிபுரிகின்றனர். எஞ்சிய மூவரும் வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய ஊர்களில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தங்கியிருந்து பணிபுரிவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. [ஒ-எ]

தண்ணீர் தொட்டிகள்

பருத்தித்துறை துறைமுகத்துக்கு கொழும்பு செல்ல வரும் நோயாளர்கள் மற்றும் துறைமுக தொழிலாளர்கள் ஆகியோரின் நன்மை கருதி இருகுடி தண்ணீர் தொட்டிகளை மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதனையிட்டு துறைமுகப் பொறுப்பாளர் திரு. க. மாணிக்கவாசகர் நன்றி தெரிவித்துள்ளார். (ஒ-165)

124 தமிழர்கள் ஊவாவில் கைது

கொழும்பு, பெப். 19

ஊவாப் பகுதியில் அண்மைக் காலத்தில் 124 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதானவர்களில் வர்த்தகர்கள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர். சரோஜாதேவி, புஷ்பராணி என்ற இருவர் உட்பட நான்கு பெண்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

[ஒ-10]

குளிரூட்டி ரயில் கட்டணம் ரூ. 260

கொழும்பு. பெப். 19

கொழும்பு-வவுனியா ரயிலில் இணைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட பெட்டியில் பயணம் செய்ய 260 ரூபா (ஒரு வழி), முதலாம் வகுப்பு ஆசனம் ஒன்றுக்கு அறவிடப்படுகிறது.

(ஒ-எ)

சாரண சின்னம் சூட்டும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 19

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில், புதிய சாரண அங்கத்தவர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, சின்னம் சூட்டும் வைபவம் நடை பெறவுள்ளது.

[ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, செவ்வாய்க் குற்றமற்ற, A/L சித்தியடைந்து கனடாவில் வசிக்கும் 25வயது மணப்பெண்ணுக்கு பெற்றோர் கனடாவிலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம் ஆயிலியம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19765]

யாழ். இந்து, செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது ஆசிரியைக்கு உள்நாட்டு மணமகனை அல்லது கனடாவில் உள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். நட்சத்திரம் பூரட்டாதி, 3 ஆம் கால். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19694]

இலவச திருமண சேவை

ICMA முடித்து கொழும்பில் பணிபுரியும் 27 வயது 2 இல் செவ்வாய் பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை சேவையை நாடுபவர்கள்: ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [19774]

தவறிவிட்டது

அருளானந்தம் அன்ரன் ஜெயசீலனுடைய அடையாள அட்டையும், றைவிங் லைசென்ஸும் 16-1-92 இல் பண்டத்தரிப்புக்கும், இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இளவாலை புனித றீற்றம்மாள் கோவிலடியிலுள்ள 'அருளகம்' கடையில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [19771]

புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'', திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம், இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது, இதயம் சிலிர்க்கிறது, மானம் உயிர்க்கிறது. [19773]

அப்பியாசக் கொப்பிகள்

சகல தர அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள் விற்பனையாகின்றன. அறிவகம், 374, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம் [சி-1608]

சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5045)

சோதிடம்

உங்களின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால பலன்களை விவரமாக அறிய விரும்புகிறீர்களா? அப்படியானால் நேரில் வாருங்கள்! கேட்டுப் பாருங்கள்!! ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் விஞ்ஞானம், சாமுத்ரிகா லட்சணம் ஆகியன கொண்டு, உங்களது கல்வி, உத்தியோகம், தொழில், விவாகம் அனைத்தையும் அறிந்திட நாடுங்கள்; த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (19754)

இந்தியப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க வசதி

கொழும்பு, பெப்.19

புலமைப் பரிசில் பெற்று இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் —

எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விவரங்கள் கடந்த 14 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. [ஒ-எ]

சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 19

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினரால் நடத்தப்படும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

யாழ். மாவட்டத்தில் இயங்கிய கைத்தொழில் நிறுவனங்கள் பற்றி செயலகம் மதிப்பீடு நடத்துகிறது

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்டத்தில் கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இயங்கிய நிறுவனங்கள் தொடர்பான புள்ளி விவரங்களே சேகரிக்கப்படுகின்றன.

மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் பற்றியும், அவற்றில் கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை குறித்தும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமசேவையாளர்கள் மூலமாக இந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ஒ-3)

இலங்கையின் கணக்கீட்டு நியமங்கள் கருத்தரங்கு

மேற்படி கருத்தரங்கு சனிக்கிழமை, 23-02-1992 னரும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் காலை 1 மணி வரை நடைபெறும். தொழில் நுட்பக் கல்லூரி, யாளர்கள் நிகழ்த்துவர்.

எதிர்வரும் 22 - 02 - 1992 ஞாயிற்றுக்கிழமையும், பின் 9 மணி தொடக்கம் பகல் இதற்கான விளக்கவுரை பல்கலைக்கழக விரிவுரை

முன் கூட்டியே தமிழ் ஆக்க பிரதிகளை கல்லூரியின் விற்பனை கூடத்தில் 17 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை காலை 9மணி தொடக்கம் 12மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இக்கருத்தரங்கில் தொழில் நுட்பக் கல்லூரி வணிகத்துறைசார் மாணவர்கள், பல்கலைக்கழக வணிகத்துறைசார் மாணவர்கள், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் இத்துறை சார்ந்தவர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

வணிக மாணவர் மன்றம்.
(பகுதி நேரம்)

[19776]

45ஆம் நாள் நினைவஞ்சலி

ஜனனம்: 30 — 12 — 1961

மரணம்: 06 — 01 — 1992

அமரர்

ஐயம்பிள்ளை மகேந்திரன்

(மகேன்)

(தெ. ப. நோ. கூ. ச. இளை முகாமையாளர்)

பாசத்துடன் எந்நாளும்
பழகிய எம்முறவே
பழகிவிட்டு எங்களை
பாதியில் விட்டதேனோ?

நீ எங்கு சென்றாலும்
நினைவுகள் எம்மனதில்
நித்தமும் இருக்குமையா
நீங்காத சித்திரமாய்.

உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள், நண்பர்கள்.

தெல்லிப்பழை கிழக்கு. [5051]

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
16 — 11 — 1959

ஆண்டவன் அடியில்;
06 — 03 — 1988

திருமதி அருள்மணி (வதனி) சச்சிதானந்தம்

பாரினிலே பார்புகழப் பல்லாண்டு காலம் நீ வாழ்வாய் என எண்ணி நாமிருந்தோம். கொடுங் காலன் கொடுஞ் செயலால் எம் நினைவு கனவாகி விட்டதம்மா.

எம் நினைவு உள்ளவரை
எம் தெய்வத்தை நாம் மறவோம்.

அன்பு:
அம்மா, அப்பா, அக்காமார், அண்ணா, தம்பிமார், தங்கை, மச்சான்மார், மச்சாள்மார், மாமா, பெறாமக்கள், மருமக்கள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. [19763]

மண்ணில் மறைந்த எங்கள் அருமைத் தந்தையின் ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் இளையதம்பி இரகுநாதன்

(இலகுப்பிள்ளை)

திதி: 19 — 02 — 1992

தோற்றம்: 05 — 03 — 1926

மறைவு: 02 — 03 — 1991

அன்புமிரு பண்புபெறு பாசத்தோடும்
அவனியில் நின்றுமெழில் கொண்டு நம்மை
இன்பமுடன் காத்தபெரும் எந்தையும்மை
இன்நிலத்தில் நாமிழந்து இன்றோராண்டு
கண்டதென கண்டுமனங் கலங்கியிங்கு
காசினியில் உம் நினைவு தொடரநாமும்
பண்புடனே மனைவி மக்கள் சுற்றம்யாவும்
பாங்குடனே அஞ்சலிகள் செய்தோமின்றே:

அன்பு:
மனைவி, மக்கள்.

உடையார் வளவு,
புன்னாலைக் கட்டுவன். [19642]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாதகல் ... யாழ்ப்பாணம்

உதயன்

ஒரு சோறு பதம்!

ஏறாவூரைச் சேர்ந்த தமிழ் இளைஞன் காளிமுத்து சதீஸ் குமார் என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பு எல்லோரது கவனத்தையும் ஈர்க்கக் கூடியதாகும்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடித் திரிந்தது பற்றியும், அவர்கள் சுவரொட்டி ஒட்டியது பற்றியும் தெரிந்திருந்தும் அவை குறித்துப் பொலீசாருக்குத் தகவல் தெரிவிக்கத் தவறிவிட்டார் என்பதே அவ்விளைஞர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டைப் பொலீசார் நிரூபித்தார்களோ இல்லையோ, வழக்கை விசாரித்த நீதிபதி வழங்கிய தீர்ப்பு, நீதிமன்றம் கலையும் வரையான சில மணி நேரச் சிறைத் தண்டனையே!

பொதுவாக, நீதிமன்ற அமர்வுகளுக்குக் குந்தகமாகச் சத்தம் போட்டுக் கதைப்போர் அல்லது நீதிமன்றத்தின் மகிமையைக் குறைக்கும் விதத்தில் நடந்து கொள்வோருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்படுவது உண்டு.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட தமிழ் இளைஞர், சில்லறைக் குற்றம் செய்தார் என்று கருதியே அவருக்கும் வெகு "இலேசான" தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சில்லறைக் குற்றச்சாட்டின் பேரில் அவர் பதினெட்டு மாதங்கள்—ஐந்நூற்றிநாற்பது நாட்கள்—விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்!

தமிழ் இளைஞர்கள் என்றால், விளக்கமறியல் என்பது-சித்திரவதைச் சிறை என்றே அர்த்தப்படும். தகவல்களைப் பெறப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் விசாரணை என்ற பெயரில் விளக்க மறியல் சாலைகள் சித்திரவதைக் கூடங்களாக இயங்குவது இலங்கையில் ஒன்றும் புதியதல்ல. பல்லாண்டுச் சாதனை உடையது.

தமிழ் இளைஞர்கள் என்று ஆகிவிட்டால் நரகத்தை அங்கே காணலாம். உடல் உளரீதியான சகல தாக்கங்களும் ஏற்படும் விதத்தில் விளக்கமறியல் சாலைகளிலும், தடுப்புக் காவல் முகாம்களிலும் தமிழ் இளைஞர்கள் மனிதாபிமானம் இன்றி இம்சை செய்யப்படுவது உலகம் தெரிந்த பேருண்மை. இது விடயத்தில் பூஸாவும் மகஸீனும் ஒன்றுக்கு மற்றது சளைத்தது அல்ல!

ஏறாவூர் தமிழ் இளைஞரைப் போலவே, வடக்கு-கிழக்கைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் குற்றச்சாட்டு எதுவென்று தெரியாமல், வழக்குத் தாக்கல் செய்யப்படாமல், விசாரணை இன்றி, ஸ்ரீலங்கா அரசின் சித்திரவதைக் கூடங்களில் தமது காலத்தைக் கழித்து வருகிறார்கள்.

காரணம் எதுவும் இன்றி, குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல், அல்லது பெயருக்காகச் சில்லறைக் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து, வழக்குத் தொடராமல் மக்களைத் தடுப்புக் காவலில் அல்லது விளக்க மறியலில் வைப்பது மிகப் பெரும் மனித உரிமை மீறலாகும்.

இப்போது விளக்க மறியலில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் மீது வழக்கு விசாரணை நடக்குமானால் பெரும்பாலானோருக்கு சில்லறைத் தண்டனை அல்லது விடுதலையே தீர்ப்பாக இருக்கும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இனியாவது அரசாங்கம் காரணமின்றித் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் அப்பாவித் தமிழ் இளைஞர்களை, தமிழர்களை விடுவிக்க ஏற்பாடு செய்யுமா?

ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வருவதைவிட

அரசை ஸ்திரப்படுத்தும் சுயநலமே பஞ்சாப் தேர்தலின் உள்நோக்கம்!

இன்றைய தேர்தல் குறித்து ஒரு கண்ணோட்டம்

56 மாத கால ஆளுநர் ஆட்சியின் பின்னர், மிகவும் பரபரப்பான சூழ்நிலையில், இந்தியாவின் மிக நெருக்கடி மிக்க மாநிலமான பஞ்சாப்பில் இன்று புதன்கிழமை தேர்தல் நடைபெறுகிறது. 13 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 117 சட்டசபைத் தொகுதிகளுக்கும் இன்று வாக்களிப்பு நடைபெறும். வெரித்தாஸின் "உண்மையின் எண்ணங்கள்" நிகழ்ச்சியில் ஒலிபரப்பான பஞ்சாப் பற்றிய கண்ணோட்டம் கீழே பிரசுரமாகி உள்ளது.

இன்று புதன்கிழமை பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 13 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 117 சட்ட சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறப் போகிறது.

பாதுகாப்பாக தேர்தலை நடத்துவோம் என்று இந்திய அரசு வெளிப்படையாகக் கூறிக் கொண்டாலும் கூட தேர்தலில் மக்கள் பயமின்றி வாக்களிக்க முன்வருவார்களா என்பது சந்தேகம் தான்.

தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் முதலில் வாக்களித்த ஐவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் போவதாக பஞ்சாப் மாநில அரசியல் கட்சி ஒன்று அறிவித்திருப்பது மூலம், மக்கள் வாக்களிக்க வெளியே வரமாட்டார்கள் என்பது தெளிவாகிறது.

56 மாதகால ஆளுநர் ஆட்சி

ஜனநாயக முறையை விரும்பும் மக்களே தேர்தலில் வாக்களிக்க முடியாதெனில் இத்தேர்தல் பஞ்சாப்பில் எந்த மாற்றத்தையாவது கொண்டு வரும் என்பது சந்தேகமே. பஞ்சாப்பில் தேர்தல் முடிந்து புதிய அரசு அமைந்தால் 59 மாதகால ஆளுநர் ஆட்சி முடிவடைந்து ஜனநாயக ஆட்சி மலரும்.

1985 ஆம் ஆண்டு பஞ்சாப்பில் முதல்வர் பர்னாலாவின் அரசை அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி கலைத்து ஆளுநர் ஆட்சியை அமுல் செய்தது முதல் இதுவரை அங்கு ஆளுநர் ஆட்சி தான் நடைபெற்று வருகிறது

எத்தனை முயற்சிகளை எடுத்தும் பிரிவினைகோரும் பஞ்சாப் தீவிரவாதிகளை இந்திய அரசினால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்திய இராணுவத்தின் துணையோடு தற்போது தேர்தலை நடத்தி முடித்து விடலாம். ஆனால் அது ஒரு நிஜத் தேர்தலாக இருக்குமா என்பது சந்தேகமே. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தவில்லை என்றாலும் கூட, சீக்கிய மக்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை இந்திய அரசு விலக்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்த நீதிமன்றம் அல்லது இந்திய அரசு, இந்திரா காந்தி கொல்லப்பட்டதற்குப் பழி வாங்கும் முகமாக நாட்டின் பல பகுதியிலும் கொலை செய்யப்பட்ட சுமார் மூவாயிரம் சீக்கிய மக்கள் சம்பந்தமாக இதுவரை யாரைத் தண்டித்தது என்ற கேள்வி எழுகிறது.

இந்திரா காந்தி உயிரிழந்தால் அவரின் உயிர் மேன்மை மிக்கது என்றும், அப்பாவிச் சீக்கியர்களின் உயிர் என்றால் அது கீழானது என்றும் சீக்கிய மக்கள் கருத இது வழிவகுக்கிறது.

நரசிம்மராவ் போக்கு

இந்த போக்கை மாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சீக்கிய மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது, அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் தான் இப்போதைய பிரதமர் பி. வி. நரசிம்மராவ்.

எனவே அன்றைய படுகொலைகளுக்கு தார்மீக பொறுப்பேற்று பதவியில் இருந்து அன்று விலக முன்வராத நரசிம்மராவ் சீக்கிய மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உறுதியுடன் நிற்பார் என எப்படி சீக்கிய மக்கள் எதிர்பார்க்க முடியும்.

அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் பதவியை அடைந்ததும் கொள்கை மாறி விடுமா?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத இந்திரா காங்கிரஸ் அரசு பஞ்சாப்பில் உள்ள 13 நாடாளுமன்றத் தொகுதிகளில் சிலவற்றை யாவது பிடித்து தனது நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்துடனேயே தேர்தல் நடத்துகிறது என்ற குற்றச்சாட்டில் உண்மை இருக்கும் என்றாகிறது.

இதன் மூலம் பஞ்சாப்பில் ஜனநாயக ஆட்சியைக் கொண்டு வரவேண்டும் என்பதை விட தனது அரசை ஸ்திரப்படுத்தி விட வேண்டும் என்ற சுய நலத்துக்காக இந்திரா காங்கிரஸ் அரசு தேர்தலை நடத்துகிறது என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இந்திய அரசியல்

சந்திரசேகர் பிரதமராக இருந்த போது முழு உற்சாகத்துடன் பஞ்சாப்பில் தேர்தலை நடத்த முற்பட்டபோது தேர்தலையே புறக்கணிப்பதாக அறிவித்த இதே இந்திரா காங்கிரஸ் கட்சி, தான் பதவி ஏற்றவுடன் அதாவது பதவி ஏற்று எட்டே மாதங்களில் தேர்தலை நடத்துகிறது.

எட்டு மாதங்களில் தேர்தலை நடத்தும் அளவுக்கு பஞ்சாப்பில் நிலைமை சீராகி விட்டதா?

இந்திரா காங்கிரஸ் கட்சி ஏன் இப்படி இரட்டை வேடம் போடுகிறது என்ற கேள்வியும் எழுகிறது.

அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியின் அழைப்பை ஏற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சீக்கியத் தலைவர் லொங்கோவாலுக்கு இந்திய அரசு சரியான பாதுகாப்பு அளிக்கத் தவறியதை அடுத்து அவர் படுகொலை செய்யப்பட்டார்.

சமாதானத் திட்டத்தில் கையெழுத்திட்ட தலைவரையே பாதுகாக்க முடியாதென்றால் ஜனநாயகத்தை விரும்பும் பஞ்சாப்பின் ஒரு சாதாரண வாக்காளனை எப்படி அரசு பாதுகாக்க முடியும் என்று பஞ்சாப் மக்கள் சிந்திக்கக் கூடும் அல்லவா? எனவே தேர்தலில் பயமின்றி வாக்களிக்க எவர் முன்வர முடியும்?

சீக்கியர்களின் முக்கிய கட்சிகள் அனைத்தும் தாம் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டன. இதனால் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் அது ஒரு சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகவே இருக்க முடியும். அந்தக் கட்சி மக்களின் முழு செல்வாக்கையும் பெற்ற கட்சியாகவும் இருக்க முடியாது.

அவசரத்தில் நடக்கும் தேர்தல்

எனவே தேர்தலை அவசரத்தில் நடத்துவதை விட முக்கிய கட்சிகளுடன் அரசு பேச்சு வார்த்தை நடத்தி இத்தேர்தலை நடத்தி இருக்கலாம்.

எத்தனை சமாதான அழைப்புகளை வெளியிட்ட பின்பும் பேச்சு வார்த்தைக்கு வர மறுக்கும் சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப்பின் புதிய அரசு இந்திய அரசுடன் முடிவு செய்யும் சமாதானத் திட்டத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே அரசு தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டும் அல்லது அவர்களின் சில நியாயமான கோரிக்கைகளை ஏற்க வேண்டும். தேர்தலை மட்டும் நடத்துவது மூலம் சர்வதேச அரங்கில் இந்தியா ஜனநாயக ரீதியாக மட்டுமே தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகிறது.

ஏற்கனவே லொங்கோவாலுடன் இந்திய அரசு செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைப்படி, சண்டிக்கார், மற்றும் ராவீப்பியா நதி நீர்ப் பங்கீடு உட்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை; இவற்றைத் தீர்க்காமல் இந்திய அரசு சமாதானம் என்று கருதுவது இந்திரா காங்கிரஸ் அரசின் இரட்டை வேடத்தையே மீண்டும் புலப்படுத்தும். ★

மாகாணசபை தீர்வாகாவிட்டால் சமஷ்டி ஆட்சிமுறையே உகந்தது

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கருத்து

கொழும்பு, பெப். 19

எதிர்காலப் பிரச்சினைக்கான வெற்றிகரமான தீர்வாக மாகாண சபைகள் அமையவில்லை என்றால் சமஷ்டி அரசியல் முறையிலான அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் விரிவுரையாளராகப் பணிபுரியும் டாக்டர் சாந்தா கே. ஹெனனாயக்கா 'த ஐலண்ட்' நாளிதழுக்கு எழுதிய கட்டுரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அடையாள ரீதியான இணைப்பு" [The Symbolic Link to Territory] என்ற தலைப்பிலான இக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள முக்கிய சில பகுதிகள் வருமாறு:

இந்த நாட்டில் தமிழர்களுக்குள்ள பெயரளவிலான உரிமையைக் கூட மறுப்பதாக சிங்களக் கல்வி மான்களின் பல நிலைப்பாடுகள் இருப்பதாகத் தெரிகிறது.

1. இலங்கையின் சரித்திரம் இன்னும் சிங்களவர்களின் சரித்திரமாகத் தான் தெரிந்து கொள்ளப்படுகின்றது. இலங்கைச் சரித்திரத்தில் சிங்கள பௌத்தர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கலாம் என்பது உண்மையாக இருப்பினும், சிங்கள பௌத்தர்களின் எதிரிகளாக அல்லது சிங்கள பௌத்த நாகரீகத்தை அழிப்பவர்களாக தமிழர்கள் இருந்ததில்லை.

இந்த நாட்டை ஆட்சி செய்த சில சந்தர்ப்பங்களில் சிங்கள பௌத்த தத்துவத்தின் பாதுகாவலர்களாக தமிழர்கள் முக்கிய பங்கை ஆற்றியுள்ளனர்.

2. சிங்கள இனத்தின் ஆரம்பம் பற்றிய கட்டுக்கதைகளில் இருந்து இலங்கைச் சரித்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உண்மையான சாட்சியங்களின் அடிப்படையில் இலங்கையின் சரித்திரம் மீண்டும் எழுதப்பட வேண்டும்.

3. இலங்கையில் சிங்கள வரை சரித்திர ரீதியாக முதன்மைப்படுத்தும் செயலை, சரித்திர உண்மைகளின் அடிப்படையில் மீண்டும் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது ஆரம்பகுடியேற்ற வாசிகளாகச் சிங்களவர் இருப்பினும் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதான சரித்திர முன்னுரிமைகளுக்கும் நாட்டின் தற்போதைய அரசியலுக்கும் குறைந்தளவு பொருத்தமே காணப்படுகின்றது.

4. இலங்கையில் ஒற்றையாட்சி முறையைத் தவிர வேறு எந்த அமைப்பும் இருக்க முடியாது என்ற நிலைப்பாடு தீவிர மீள்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. ஒரு நாட்டின் உள்நாட்டு அரசியல் கட்டமைப்பு என்றுமே நிலையான ஒன்றாக இருக்காது. அந்த அரசமைப்பு முறை அரசியல் யாப்பின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்தாலும், அரசியல் தேவைகளுக்கு இடங்கொடுப்பதற்காக அந்த அரசியல் யாப்பையே திருத்தவும் முடியும்.

உதாரணத்திற்கு, மாகாண சபைகளை ஏற்படுத்துவதற்காக அரசியல் யாப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தம் அரசியல் அதிகாரப் பரவலாக்கலுக்கு நீண்டகாலமாகத் தெரிவிக்கப்பட்டு வந்த எதிர்ப்பை செல்லுபடியாக்கியது

எதிர்காலத்தில் பிரச்சினைக்கான வெற்றிகரமான தீர்வாக மாகாண சபைகள் அமையவில்லை என்றால் சமஷ்டி அரசமைப்பு முறை, அரசியல் அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமளிக்கப்பட வேண்டும். இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

3,195 கோடி ரூபா சுங்க வருமானம்

கொழும்பு, பெப். 19

சுங்கத் திணைக்களம் 1991 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 195 கோடி ரூபா வருமானமாகப் பெற்றதாக சுங்கத் திணைக்கள இயக்குநர் தெரிவித்தார்.

[ஒ-10]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொண்டர் ஆசிரிய நியமனம்; பட்டியல் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவிருக்கும் 1,020 பேரின் பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியல் இறுதி அங்கீகாரத்துக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நியமிக்கப்பட இருப்போர் குறித்த அறிக்கையை கல்விச் சேவை ஆணைக்குழு கோரி இருந்தது.

அதன்படி இறுதிப் பட்டியலுடன் அது சம்பந்தமான அறிக்கையை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் கொழும்புக்கு எடுத்துச் சென்றார். [உ-3]

கொழும்பில் .....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது. இந்தச் சம்பவம் குறித்து இச்செய்தி எழுதப்படும் வரை மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

மரண அறிவித்தல்கள்

முருகேசு மார்க்கண்டு

காரைநகர் ஆயிலியைச் சேர்ந்தவரும், 'சொக்கவாசா', சங்கரத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான முருகேசு மார்க்கண்டு 17-2-92 திங்கட்கிழமை பகல் 1-00 மணிக்கு உடையார்கட்டில் காலமானார். இவர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், சிவமலர், சிவயோகம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் உடையார்கட்டில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கு. குலசிங்கம்
[மைத்துனர்]

[19781]

நாகம்பிள்ளை செல்லையா (V. N. செல்லையா)

சுன்னாகத்தைச் சேர்ந்த நாகம்பிள்ளை செல்லையா அவர்கள் 16-02-92 இல் கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர் பருத்தித்துறை பிரபல புடைவை வியாபாரியும், தனலக்ஷ்மி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும். புனிதமலர் [கனடா], யோகானந்தராசா [சமூகசேவை உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, தெல்லிப்பளை], இராமச்சந்திரன் [வடிசாலைக் கூட்டுத்தாபனம், கொழும்பு], மனோரஞ்சிதமலர் [கொழும்பு], கனகாம்பிகைமலர் [மஜிஸ்திரேட், மன்னார்], லக்ஷ்மிகாந்தன் [கனடா], கிருபானந்தன் [பிரான்ஸ்], சிவஞானசௌந்தரவல்லி [கொழும்பு], கருணாகரன் [ஜேர்மனி], அனுஷ்யா [இங்கிலாந்து] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பழனிசாமி [கனடா], பஞ்சாட்சரராணி, ராணி, செல்வநாயகம் [ஓய்வு பெற்ற தபாலதிபர், கொழும்பு], சிவபாதசுந்தரம் [சவூதி அரேபியா], பவளராணி [கனடா], ரவி [U. K.] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 155/1, மெசென்சர் வீதி, கொழும்பு 12இல் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு [19-02-92] புதன்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. யோகானந்தராசா
[மகன்]

''லக்ஷ்மி வாசா'',
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

[19775]

திருமதி சிவயோகம் இராசரெத்தினம்

திருமதி சிவயோகம் இராசரெத்தினம் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற இராசரெத்தினத்தின் மனைவியும், சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சு. துரையப்பா, புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற சு. குமாரசாமி [கொறியா], வேலணையைச் சேர்ந்த சு. திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, அன்னலட்சுமி [வவுனியா], அழகேஸ்வரி, பரமேஸ்வரி [ஆசிரியை, நடராசா வித்தியாசாலை], பூபாலசிங்கம் [பூபால் இன்டஸ்றீஸ், வவுனியா], தனபாலசிங்கம், தர்மலெட்சுமி, இராசேஸ்வரி, வடிவாம்பிகை, கமலாம்பிகை, கங்கைவேணியன் [G. N. A. திரான்ஸ்போட்], சந்திரவதனி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [19-02-92] புதன் கிழமை மு. ப. 10 மணிக்கு இல. 14, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெருவில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. கங்கைவேணியன்
[G. N. A. Transport]

இல. 14, ஐயனார் கோவில் வீதி,
தட்டா தெரு, யாழ்ப்பாணம்.

[19779]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-2-1992 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

மற்றொரு "குட்டி யாழ்ப்பாணம்" மலையக நிலை குறித்து விமர்சனம்

கொழும்பு, பெப். 19

மலையகத்தில் தமிழர் கைது செய்யப்படுவது குறித்து ''மற்றொரு குட்டி யாழ்ப்பாணம்'' என்ற தலைப்பில் ''ராவய'' கிங்கள வார இதழ் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

தீர்த்தமாட..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நெரிசலில் சிக்கிய பக்தர்கள், நெரிசலில் இருந்து தப்புவதற்காக குளத்தின் வாசலுக்கு முண்டியடித்தபோது செங்கல் சுவர் ஒன்று உடைந்து வீழ்ந்தது என்றும்—

அச்சுவரின் இடிபாடுகளிடையே சிக்கியும் பலர் உயிரிழந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஹெலிக்கொப்டரில் கும்பகோணம் வந்த முதல்வர் செல்வி ஜெயலலிதா குளத்தில் தீர்த்தமாடிய பின்னர் பாதுகாப்பாகப் புறப்பட்டுச் சென்றார் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று தீர்த்தோற்சவத்தின் போது தமிழக முதல்வரின் சார்பில் பத்து லட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-எ-த-3]

மகாமகத்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மரணமாகினர்.

இந்தச் சம்பவங்களில் படுகாயமடைந்த பக்தர்களின் எண்ணிக்கை முன்னூறுக்கும் அதிகம் என்றும்—

ஆபத்தான நிலையில் அவசர அவசரமாக, கோயில் பகுதிகளில் இருந்து வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர்களில், பலரின் நிலை குறித்து இன்னும் தகவல் தெரியவில்லை என்றும் சுயாதீன செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என்றும் அஞ்சப்பட்டது. [உ-எ-த-3]

சர்வதேச..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான்மை இனமும் சிறுபான்மையினத்தை ஒடுக்கினால், அதில் இருந்து விடுதலை பெறும் உரிமையை சிறுபான்மையினம் கொண்டுள்ளது—

அதன் நிமித்தம் தமிழ் சிறுபான்மை இனம் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளது. — ஆகிய தீர்மானங்களும் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (அ-எ)

டாக்டர்கள்..

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களில் இருவர் முதலாம் பிரிவிலும், 31 பேர் இரண்டாம் பிரிவிலும், 15 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்தி எய்தியிருக்கிறார்கள்.

செல்வி என். பாலசுப்பிரமணியம், ஜி. ஆர். கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரே முதலாம் பிரிவில் சித்தி அடைந்திருக்கிறார்கள். [அ]

யாழ். தபால்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வந்தது பற்றி கடந்த சனிக்கிழமையே தங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும்—

ஊரடங்கு அமுலில் இருந்ததால் உடனடியாக தபால் பொதிகளை பருத்தித்துறையில் வைத்துப் பொறுப்பேற்க முடியவில்லை என்றும்—

கப்பல் மீண்டும் பருத்தித்துறை வந்து சேர்ந்த கையோடு தபால் பொதிகள் பொறுப்பேற்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3-165]

அதிலிருந்து சில பகுதிகள் வருமாறு:-

ஊவா பகுதியில் இதுவரையில் 124 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 'பாக் எஸ்டேட்' என்ற தோட்டத்தில் கைது செய்யப்பட்ட ஒருவர் பதுளைக்கு கூட்டிச் செல்லப்பட்டு இரண்டு நாட்கள் தாக்கப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டார். இவர் பின்னர் பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அங்கு மரணமானார்.

இதுவரையில் இம் மரணம் தொடர்பாக விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

இறந்தவரின் தந்தை ஒரு கால் ஊனமுற்றவர் எனவும் முழுக் குடும்பமும் இவரது உழைப்பிலேயே தங்கியிருந்தது என்றும் சொல்லப்படுகிறது.

பன்னிரண்டு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 9பேர் பின்னர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட பின்னர் பொலீஸ் அதிகாரிகள் பலர் இவர்களது கடைகளுக்கு அடிக்கடி சென்று பணம் கொடுக்காது பொருட்களை எடுத்துச் செல்கின்றனர்.

இதுவரையில் நான்கு தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொரு நாளும் பொலீஸ் காவலில் இம்சைக்குள்ளாகி வருகின்றனர்.

மலையகச் சம்பவங்கள் தொடர்பாக கொழும்பில் இதுவரை 40 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வர் மேலதிக பொலீஸ் சேவையில் நியமனம் பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள். இருவர் 'புளொட்' அங்கத்தவர்கள்.

ஹிந்தகல தோட்டத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில், தோட்ட அதிகாரியால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட அவரின் சாரதி, மைத்துனர் மற்றும் ஒரு பிக்கு ஆகியோரின் பெயர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

கரையோரப் பகுதிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 19

கடலிலிருந்து குடாநாட்டின் கரையோரப்பகுதிகளை நோக்கி தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீரிமலை கடற்பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் நேற்றுக் காலை 7 மணியளவில் நாவாந்துறை, கொட்டடி கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நேற்றுக் காலை 8 மணியளவில் பருத்தித்துறையிலும் கடலோரப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

மீனவர்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலிலிருந்து மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-15-165)

இன்று ஆரம்பம்

''உதயன்'' கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று மாலை ஆரம்பமாகிறது.

இன்று மாலை 3.45 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில், டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதும்.

இன்று மாலை 4-30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் இளஞ்சுடர் வி. க. அணி, சென். அன்ரனிஸ் வி. க. அணி ஆகியவை மோதும்.

பருத்தித்துறை திக்கமுன்னையில் உள்ள ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் 31 கழக அணிகள் பங்குபற்றுகின்றன. [உ]

பஞ்சாபில் இன்று தேர்தல்

பஞ்சாப் மாநில சட்டசபைக்கும் அங்குள்ள 13நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் இன்று தேர்தல் நடைபெறுகிறது. இதனையொட்டி இம் மாநிலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை சீக்கியத் தீவிரவாதிகள் குழப்பாமல் இருப்பதற்காக — ஒரு லட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினரும், 70 ஆயிரம் துணை இராணுவப் படையினரும், 45 ஆயிரம் மாநிலப் பொலீஸாரும், 28 ஆயிரம் ஊர்காவல் படைத் தொண்டர்களும் — பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்களிப்பு ஆரம்பமானதும் 32 இந்திய விமானப் படை ஹெலிக்கொப்டர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும்.

மரண அறிவித்தல்

வல்லிபுரம் கனகம்மா

ஊர்காவற்றுறை, பண்ணை வீதி, கரம்பன் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் கனகம்மா காலமானார்.

இவர் காலம்சென்ற இராமலிங்கம் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்து, பராசக்தி, பரமேஸ்வரி, வேலாயுதபிள்ளை, நித்தியலட்சுமி, காலஞ்சென்ற சிந்தாமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசு, கலைமகள், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை, அன்னலிங்கம், பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி.ப. இரண்டு மணிக்கு பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வ. வேலாயுதபிள்ளை
[மகன்]

[19782]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org